**நவம்பர் – 15**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் 62.51 கோடி ரூபாய் செலவில் மாநிலம் முழுவதும் 12 புதிய பணி புரியும் பெண்களுக்கான தோழி விடுதிகளுக்கு அடிக்கல் நாட்டினார், இதன் மூலம் 740 உழைக்கும் பெண்கள் பயனடைவார்கள்.
- ஃபரிதாபாத்தில் உள்ள டெல்லி பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த அர்ஷி குப்தா, இந்தியாவில் தேசிய பந்தய மோட்டார் வண்டி (கார்டிங்) சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற முதல் பெண் பந்தய வீரர் ஆனார்.
- மூத்த இந்திய திரைப்பட கலை இயக்குனர் தோட்டா தரணிக்கு பிரெஞ்சு அரசாங்கத்தின் மதிப்புமிக்க செவாலியர் டி எல்'ஆர்ட்ரே டெஸ் ஆர்ட்ஸ் எட் டெஸ் லெட்டர்ஸ் (நைட் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்) விருது வழங்கப் பட்டது.
    - இது முதன்முதலில் தமிழ் சினிமாவிலிருந்து நடிகர் சிவாஜி கணேசனால் 1995 ஆம் ஆண்டிலும், பின்னர் 2016 ஆம் ஆண்டில் கமல்ஹாசனாலும் பெறப் பட்டது.
- தூத்துக்குடியில் உள்ள VOC துறைமுகம், ஒரே கப்பலில் இருந்து 103 காற்றாலை இறக்கைகளை இறக்கி சாதனை படைத்துள்ளது.
- அமெரிக்காவின் ஒஹியோவின் டேட்டனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு டேட்டன் இலக்கிய அமைதி பரிசு விழாவில், சல்மான் ருஷ்டி தூதர் ரிச்சர்ட் C. ஹோல்ப்ரூக் சிறப்பு சாதனையாளர் விருதை (வாழ்நாள் சாதனையாளர் விருது) பெற்றார்.
- காலின்ஸ் அகராதியானது 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டின் சிறந்த சொல்லாக 'Vibe coding' என்ற சொல்லினைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்திய இராணுவம் ஆனது, குஜராத்தின் ரான் மற்றும் க்ரீக் துறையில் திரிசூல் என்ற முப்படைகளின் பயிற்சியின் ஒரு பகுதியான பிரம்மஷிரா பயிற்சியினைத் தொடங்கி உள்ளது.
    - நிலம், கடல் மற்றும் வான் முழுவதும் ஒருங்கிணைந்த செயல்பாட்டுத் திறன்களை சரி பார்க்க இராணுவம், கடற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை ஆகியவை இந்தப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கோவளம் கடற்கரை நீலக் கொடி சான்றிதழ்

- தமிழ்நாட்டில் உள்ள கோவளம் கடற்கரை தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக சர்வதேச நீலக் கொடி சான்றிதழைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- நிலையான சுற்றுலா மற்றும் பொறுப்பான கடலோர மேலாண்மையை மேம்படுத்துவதே இந்தச் சான்றிதழின் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் கோவளம் கடற்கரைக்கு 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று வழங்கப்பட்டது என்ற நிலையில் இது தமிழ்நாட்டின் முதல் நீலக் கொடி சான்றளிக்கப்பட்ட கடற்கரையாக மாறியது.
- டென்மார்க்கில் உள்ள சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை (FEE) ஆனது 33 அளவுருக்களை மதிப்பிட்ட பிறகு சான்றிதழை வழங்குகிறது.
- அளவுருக்களில் நீரின் தரம், சுற்றுச்சூழல் கல்வி, பாதுகாப்பு, கழிவு மேலாண்மை,

தூய்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்கட்டமைப்பு ஆகியவை அடங்கும்.




# தேசியச் செய்திகள்

## CPA மண்டலம்-III மாநாடு




- 22வது காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் (CPA) இந்திய பிராந்திய மண்டலம்-III மாநாடு ஆனது நாகாலாந்தில் நிறைவடைந்தது.
- இரண்டு நாட்கள் அளவிலான இந்த மாநாடு "Policy, Progress & People: Legislatures as Catalysts of Change" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.
- விக்சித் பாரதம் 2047 (வளர்ச்சி பெற்ற இந்தியா) என்ற இலக்கினை அடைவதிலும் வட கிழக்கில் பருவநிலை மாற்றத் தாக்கங்களை நிவர்த்தி செய்வதிலும் சட்ட மன்றங்களின் பங்கு குறித்து இந்த மாநாட்டின் விவாதங்கள் கவனம் செலுத்தின.
- இந்த மாநாட்டின் போது, CPA மன்றத்தின் III ஆம் இந்தியப் பிராந்திய மண்டலத்தின் உறுப்பினர்களால் ஒன்பது தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- 22வது வருடாந்திர மாநாட்டின் முடிவைக் குறிக்கும் வகையில் மரம் நடும் இயக்கமும்

நடத்தப்பட்டது.

## 2025–26 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி




- இந்திய சர்க்கரை மற்றும் உயிரி எரிசக்தி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (ISMA) படி, 2025–26 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 18.6% அதிகரித்து 30.95 மில்லியன் டன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா (13.0 மெட்ரிக் டன்), உத்தரப் பிரதேசம் (10.32 மெட்ரிக் டன்) மற்றும் கர்நாடகா (6.35 மெட்ரிக் டன்) ஆகிய மாநிலங்களில் அதிக உற்பத்தி எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024–25 ஆம் ஆண்டிற்கான மொத்த கரும்பு சாகுபடி பரப்பளவு 5.735 மில்லியன் ஹெக்டேர் ஆகும்.
- 5 மில்லியன் டன்கள் தொடக்க சரக்கு இருப்பு மற்றும் 3.4 மில்லியன் டன்கள் எத்தனால் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட இருப்பு ஆனது, மொத்தச் சர்க்கரை கிடைக்கும் தன்மை 35.95 மில்லியன் டன்களாக வழங்கும்.
- 2 மில்லியன் டன்கள் வரையிலான ஏற்றுமதி திறனுடன், உள்நாட்டு நுகர்வு ஆனது 28.5 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.


# சர்வதேசச் செய்திகள்

## 2100 ஆம் ஆண்டளவில் உலகளாவிய 'குழந்தை பிறப்பு வீத சரிவு'

- ஒரு புதிய ஆய்வு, உலக நாடுகள் விரைவில் மிகக் குறைந்த கருவுறுதல் விகிதத்தைக் எதிர்கொள்ளும் என்று வெளிப்படுத்தியுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில், 204 (76%) நாடுகளில் 155 நாடுகள் கருவுறுதல் மாற்றீடு அளவை விடக் குறைவாகவே இருக்கும்.
- 2100 ஆம் ஆண்டில் 97 சதவீதத்திற்கும் மேற்பட்ட நாடுகள் கருவுறுதல் விகிதங்களை தேவையான சதவீதத்தை விடக் குறைவாகக் கொண்டிருக்கும்.
- கடந்த 70 ஆண்டுகளில் உலகளாவிய TFR விகிதம் பாதிக்கும் குறைவாகக் குறைந்து உள்ளது என்ற நிலையில் 1950 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு ஐந்து குழந்தைகளாக இருந்த இது 2021 ஆம் ஆண்டில் 2.2 குழந்தைகளாகக் குறைந்துள்ளது.
- உலகின் கிட்டத்தட்ட பாதி நாடுகள், 204 நாடுகளுள் 110 நாடுகள் 2021 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு 2.1 பிறப்புகள் என்ற மக்கள்தொகை மாற்றீட்டு அளவை விடக்

குறைவாக கொண்டுள்ளன.

- ஒவ்வொரு பெண்ணுக்கும் 1.1 குழந்தைக்கும் குறைவான விகிதத்துடன், தென் கொரியா மற்றும் செர்பியா போன்ற நாடுகளில் பாதகமான விகிதம் பதிவாகியுள்ளது.
- சாட் நாட்டில், ஏழு குழந்தை பிறப்புகள் என்ற TFR உலகிலேயே மிக உயர்ந்ததாக உள்ளது.




## பூடானில் புத்தர் நினைவுச்சின்னங்கள்





- இந்தியாவிலிருந்து வந்த புத்தரின் புனித நினைவுச் சின்னங்களின் ஒரு பகுதி பூடானின் திம்புவில் உள்ள தாஷிச்சோட்சோங் மடாலயத்தில் வைக்கப் பட்டுள்ளது.
- இந்த நினைவுச் சின்னங்கள் கிராண்ட் குயென்ரி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன.
- புத்தரின் பிப்ரஹ்வா நினைவுச்சின்னங்கள் என்று அழைக்கப்படும் புனித நினைவுச் சின்னங்கள், முன்னதாக புது டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டன.

- இரு நாடுகளுக்கும் இடையிலான ஆன்மீக ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில், இந்த நினைவுச் சின்னங்கள் இந்தியாவிலிருந்து பூடானுக்கு அனுப்பப் படுவது இது இரண்டாவது முறையாகும்.

### ரிஃப்ட் வேலி காய்ச்சல் பெருந்தொற்று

- ரிஃப்ட் வேலி காய்ச்சல் (RVF) என்பது மௌரிட்டானியா மற்றும் செனகலில் செம்மறி ஆடுகள், ஆடுகள், கால்நடைகள் மற்றும் ஒட்டகங்களை முதன்மையாக பாதிக்கும் ஒரு வைரஸ் வழி பரவும் விலங்கு வழித் தொற்று நோயாகும்.
- இந்த வைரஸ் கொசு கடித்தல் அல்லது பாதிக்கப்பட்ட விலங்குகளின் உடல் திரவங்களுடன் நேரடித் தொடர்பு மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது என்பதோடு இது மனிதர்களுக்கு இடையே பரவாது.
- இது கண்கள், மூளை அல்லது கல்லீரலைப் பாதிக்கிறது என்பதோடு மேலும் இரத்தக் கசிவுடன் கூடிய பாதிப்பு கிட்டத்தட்ட 50% உயிரிழப்பு விகிதத்தை ஏற்படுத்துகிறது.
- இந்தியாவில் RVF பாதிப்புகள் எதுவும் பதிவாகவில்லை, ஆனால் சாதகமான பருவ நிலை மற்றும் அதிக கால்நடை எண்ணிக்கை காரணமாக இந்த நோய் தேசிய ஒரு சுகாதாரக் கண்காணிப்பு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்படுகிறது.





## பொருளாதாரச் செய்திகள்

### IIP அடிப்படை திருத்தம்

- தொழில்துறை உற்பத்திக் குறியீட்டை (IIP) தொகுப்பில், தொழிற்சாலைகளை மாற்றுவது குறித்த விவாதக் கட்டுரை 1.0 அறிக்கையினை புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) வெளியிட்டது.
- MoSPI, வழிமுறைகளைப் புதுப்பித்தல், புதிய தரவு மூலங்களை ஆராய்தல் மற்றும் நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்தல் மூலம் IIP அடிப்படைத் தொடரைத் திருத்தி வருகிறது.

- தற்போதையக் குழுவில் உள்ள சில தொழிற்சாலைகள் செயல்படாமல் இருக்கலாம் அல்லது உற்பத்தியை மாற்றியிருக்கலாம், எனவே தரவுத் தொடரில் தொடர்ச்சியைப் பேண மாற்றீடு தேவைப்படுகிறது.
- அத்தகையத் தொழிற்சாலைகளை ஒரே பொருள் அல்லது பொருள் குழுவை உற்பத்தி செய்யும் பொருத்தமான மாற்றீடுகளுடன் மாற்றுவதற்கான முன்மொழியப்பட்ட வழி முறையை இந்த ஆய்வறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.




## இந்தியாவில் நியோடைமியம் உற்பத்தி




- இந்தியா, 2026 ஆம் நிதியாண்டில் 200 டன்னாக இருக்கும் அதன் நியோடைமியம் உற்பத்தியை 2027 ஆம் நிதியாண்டில் 500 டன்களாக உயர்த்த உள்ளது.

- அணுசக்தித் துறையின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான நிறுவனமான இந்திய அருமண் தனிமங்கள் லிமிடெட் (IREL) நிறுவனமானது, அருமண் தனிமக் கூறுகளை தோண்டியெடுத்து செயல்முறை செய்கிறது.
- அருமண் உலோகங்கள் மின்சார வாகனங்கள், தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்கள், பாதுகாப்புத் துறை அமைப்புகள் மற்றும் மின்னணுவியல் ஆகியவற்றில் பயன்படுத்தப் படுகின்றன.
- IREL ஆனது, ஒடிசா மற்றும் கேரளாவில் தோண்டியெடுத்தல் மற்றும் சுத்திகரிப்பு மையங்களை இயக்கி, பதினேழு அருமண் தனிமங்களில் எட்டு தனிமங்களை உற்பத்தி செய்கின்றன.
- உலகளாவிய அருமண் சந்தையில் சுமார் 5 முதல் 6% வரையிலான பங்கினைக் கொண்டுள்ள இந்தியா, உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், இருப்புக்களில் ஆறாவது இடத்திலும் உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முதல் அட்லாண்டிக் கடல் தாண்டிய எந்திரம் மூலமான பக்கவாத அறுவை சிகிச்சை




- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஓர் அறுவை சிகிச்சை நிபுணர், 4,000 மைல்கள் தொலைவில் அமெரிக்காவில் ஒரு நோயாளியின் உடலில் எந்திரம் மூலமான இரத்தக் கட்டி அகற்றல் அறுவை சிகிச்சையை (த்ரோம்பெக்டோமி) மேற்கொண்டார்.
- பக்கவாதத்திற்குப் பிறகு இரத்தக் கட்டிகளை அகற்றுவதற்கான குறைந்தபட்ச சாதன ஊடுருவும் செயல்முறையான த்ரோம்பெக்டோமி செய்யப்பட்டது.
- இந்த அமைப்பு ஆனது அறுவை சிகிச்சை நிபுணரை நேரடி எக்ஸ்ரே படங்களை நிகழ் நேரத்தில் கண்காணித்து, வேறொரு இடத்தில் இருந்து செயல்பட அனுமதித்தது.

- இந்தச் செயல்முறை Nvidia மற்றும் Ericsson நிறுவனத்தின் இணைப்பு ஆதரவுடன் Sentante என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு எந்திரத்தினை / ரோபோவைப் பயன்படுத்தியது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய குளிர்விப்பு முறையின் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை 2025


The Sustainable Cooling Hierarchy

| | Action | Description |
|---|---|---|
| Step 1 | Passive Cooling | **Adopt passive strategies that reduce cooling load from both comfort cooling and refrigeration systems,** to lower the upfront capital investment needed in cooling equipment and to reduce both direct refrigerant emissions and indirect energy-related greenhouse gas emissions. Passive cooling strategies include urban design, passive building design and various other techniques that can minimize cooling loads (e.g. use of doors on retail refrigerated display cabinets). |
| Step 2 | Low-Energy Cooling | **After the cooling load has been minimized, prioritize low-energy cooling systems over high-energy options.** For comfort cooling, a system that incorporates fans and evaporative cooling in place of, or alongside, air conditioning can greatly reduce the energy used and the cost of providing comfortable conditions. |
| Step 3 | Best Energy Efficiency | **Ensure that all new cooling equipment is designed and selected to achieve the maximum practical energy efficiency.** For example, variable-speed compressor systems are much more efficient than fixed-speed systems.<br><br>**Operate all existing cooling equipment with optimized control settings and with regular monitoring and maintenance**, to ensure that energy efficiency and performance are maintained throughout the operating life. |
| Step 4 | Rapid HFC Phase-Down | **Select the refrigerant with the lowest practical global warming potential (GWP) that does not compromise the system efficiency**, to continue the momentum and to achieve sustainable cooling. |

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய குளிர்விப்பு முறையின் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) அமைப்பின் குளிர்விப்பு முறைகள் கூட்டணி வெளியிட்டது.
- இந்த அறிக்கை பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற 30வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP30) வெளியிடப்பட்டது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய குளிர்விப்புத் தேவையானது மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கிறது.
- அதிகரித்து வரும் காற்றுப் பதனாக்கிகளின் தேவை, நிலையான தீர்வுகள் இல்லாமல் அது தொடர்பான $CO_2$ உமிழ்வை இரட்டிப்பாக்கி 7.2 பில்லியன் டன்களாக உயர்த்தக் கூடும்.
- ஒரு நிலையான குளிர்விப்பு செயல் முறை, 2050 ஆம் ஆண்டிற்குள் உமிழ்வை 64% குறைத்து, மின்சாரம் மற்றும் மின் கட்டமைப்பு முதலீடுகளில் 43 டிரில்லியன் டாலரை சேமிக்கும்.
- ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தற்போது குளிர்விப்புக்கான போதுமான அணுகலைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு எந்தவித நடவடிக்கையும் இல்லை எனில் 2050 ஆம் ஆண்டிற்குள் இந்த எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிக்கக் கூடும்.

## ICCI அறிக்கை 2025


- தாழ்வெப்ப மண்டலம்/கிரையோஸ்பியர் 2025 அறிக்கை ஆனது, 50க்கும் மேற்பட்ட அறிவியலாளர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, சர்வதேச தாழ்வெப்ப மண்டலப் பருவ நிலை முன்னெடுப்பினால் (ICCI) வெளியிடப்பட்டது.
- உலகளாவிய பனி இழப்பு துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும், பல நூற்றாண்டுகளாக கடல் மட்ட உயர்வு மற்றும் பிராந்திய நீர் நெருக்கடிகள் போன்ற அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாகவும் அறிக்கை எச்சரிக்கிறது.
- கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிக் பனிப்படலங்கள் ~1°C வெப்பநிலை என்ற நிலையான வரம்புகளுக்கு அருகில் உள்ளன அதே நேரத்தில் பல மலை சார் பனிப் பாறைகள் இன்னும் குறைந்த வெப்பநிலையில் கூட பாதிக்கப்படக் கூடியவையாக உள்ளன.
- தற்போதைய தேசிய உறுதிப்பாடுகள், உலகின் பெரும்பாலான பனியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பொருந்தாத வகையில் 2°C அளவிற்கும் அதிகமான வெப்ப மயமாதலையே சுட்டிக் காட்டுகின்றன.




## பருவநிலை ஆபத்துக் குறியீடு 2026

- 2026 ஆம் ஆண்டு பருவநிலை ஆபத்துக் குறியீடு (CRI) ஆனது ஜெர்மன்வாட்ச் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 1995 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தீவிர வானிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியா ஒன்பதாவது இடத்தில் உள்ளது.
- வெள்ளம், புயல்கள், வெப்ப அலைகள், காட்டுத்தீ மற்றும் பனிப்பாறை ஏரி வெடிப்புகள் போன்ற விரைவாக நிகழும் நிகழ்வுகளை இந்தக் குறியீடு பகுப்பாய்வு செய்கிறது ஆனால் கடல் மட்ட உயர்வு அல்லது பனிப்பாறைகளின் குறைவு போன்ற மெதுவாகத் தொடங்கும் நிகழ்வுகளை விலக்குகிறது.
- கடந்த 30 ஆண்டுகளில், இந்தியா சுமார் 430 தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர் கொண்டது என்பதோடு இது 1 பில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்தது என்ற நிலையில் இதனால் சுமார் 170 பில்லியன் டாலர் பணவீக்கம் ஈடு செய்யப்பட இழப்புகள் மற்றும் 80,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டன.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், பருவமழையானது குஜராத், மகாராஷ்டிரா மற்றும் திரிபுராவில் 8 மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதித்தது.

- தீவிர வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- பிலிப்பைன்ஸ், நிகரகுவா மற்றும் ஹைட்டியுடன் சேர்ந்து இந்தியா, "தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நாடுகள்" என்ற பிரிவின் கீழ் உள்ளது.
- அதாவது, காலப்போக்கில் ஒட்டு மொத்த இழப்புகளுடன் மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடிய தீவிர வானிலை நிகழ்வுகளை இந்தியா எதிர்கொள்கிறது.
- 1995–2024 ஆண்டுகளுக்கு இடையில் உலகளாவிய தீவிர வானிலை 8,32,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும், 4.5 டிரில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டிய பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்தியது.
- இது COP30 மாநாட்டில் தழுவல் மற்றும் பருவநிலை நிதி ஆதரவின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது.




## டைம் அவுட் இதழின் நகர்ப்புற வாழ்க்கை குறித்த குறியீடு





- டைம் அவுட் இதழின் நகர்ப்புற வாழ்க்கை குறித்த குறியீடு ஆனது, 2025 ஆம் ஆண்டில்

மும்பை ஆசியாவின் மகிழ்ச்சியான நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆசிய நகரங்களில் 18,000க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு ஆனது அன்றாட வாழ்க்கை, கலாச்சாரம், இரவு வாழ்க்கை, உணவு மற்றும் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் மகிழ்ச்சியை அளவிடுகிறது.
- மும்பையின் குடியிருப்பாளர்களில் 94% பேர் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், 89% பேர் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு மும்பையில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.
- சீனாவின் பெய்ஜிங் மற்றும் ஷாங்காய் ஆகியவற்றில் முறையே 93% மற்றும் 92% குடியிருப்பாளர்கள் திருப்தியை வெளிப்படுத்தியதுடன், அவை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- தாய்லாந்தின் சியாங் மாய் மற்றும் வியட்நாமின் ஹனோய் ஆகியவற்றில் முறையே 88% குடியிருப்பாளர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிவித்ததுடன் முதல் ஐந்து இடங்களில் இடம் பிடித்தன.

# மாநிலச் செய்திகள்

## GRAP நிலை-3 வாகனக் கட்டுப்பாடுகள்



Graded Response Action Plan (GRAP)

GRAP Stages

| State | Category | AQI | AQI Color Code |
|---|---|---|---|
| Stage 1 | Poor | 201-300 | |
| Stage 2 | Very poor | 301-400 | |
| Stage 3 | Severe | 401-450 | |
| Stage 4 | Severe plus | 451 and above | |

Health Statements for AQI Categories

| AQI | Category | Possible health impact |
|---|---|---|
| 0-50 | Good | Minimal impact |
| 51-100 | Satisfactory | Minor breathing discomfort to sensitive people |
| 101-200 | Moderate | Discomfort to people with lung, asthma, and heart diseases |
| 201-300 | Poor | Discomfort to most people on prolonged exposure |
| 201-400 | Very poor | Respiratory illness on prolonged exposure |
| 401-500 | Severe | Affects healthy people and seriously impacts those with existing diseases |

- ஆபத்தான காற்றின் தரம் காரணமாக டெல்லி நிர்வாகம் தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை செயல் திட்டத்தின் (Graded Response Action Plan-GRAP) 3 ஆம் கட்டத்தை அமல்படுத்தியுள்ளது.
- காற்றின் தரக் குறியீடு (AQI) ஆனது 667 அளவினை எட்டியதால் டெல்லி 'ஆபத்தான நிலை' என்ற பிரிவில் வைக்கப்பட்டது.
- BS-III பெட்ரோல் மற்றும் BS-IV டீசல் இலகுரக மோட்டார் வாகனங்கள் நகரத்திற்குள் இயங்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- அத்தியாவசியப் பொருட்கள் அல்லது சேவைகளை எடுத்துச் சென்றாலன்றி, BS-IV

டீசல் நடுத்தர சரக்கு வாகனங்கள் அங்கு செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளன.

- தேசிய தலைநகர் பிராந்தியம் (NCR) முழுவதும் கட்டுமானம், இடிப்பு மற்றும் தூசிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் தடை செய்யப் பட்டுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய நீர் விருதுகள் 2024

- சிறந்த மாநிலப் பிரிவில் 6வது தேசிய நீர் விருதுகளில் (2024) மகாராஷ்டிரா முதலிடத்தினைப் பெற்றது.
- குஜராத் மற்றும் ஹரியானா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றன.
- இந்த ஆண்டு, சிறந்த மாவட்டம், சிறந்த கிராமப் பஞ்சாயத்து, சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் சிறந்த நிறுவனம் உள்ளிட்ட பத்து பிரிவுகளில் 46 வெற்றிப் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- இந்த விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 2025 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியன்று புது டெல்லியில் வழங்க உள்ளார்.
- 2018 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த விருது ஆனது, 'ஜல் சம்ரித் பாரத்' கொள்கையின் கீழ் நிலையான நீர் மேலாண்மையை ஊக்குவிக்கிறது.





# முக்கிய தினங்கள்

## உலக நிமோனியா தினம் 2025 - நவம்பர் 12

- குழந்தைகள் மற்றும் பெரியவர்களில் அதிகம் பரவும் தொற்று மிக்க உயிர்க்கொல்லி நோயான நிமோனியா குறித்து விழிப்புணர்வைப் பரப்புவதும் அதனை எதிர்த்துப் போராடுவதும் இதன் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டு குழந்தைகளைத் தாக்கும் நிமோனியாவுக்கு எதிரான உலகளாவிய கூட்டணியால் அனுசரிக்கப்பட்டது.
- அதிக தொற்றுத் தன்மை கொண்ட நிமோனியா இருமல், தும்மல் அல்லது பாதிக்கப் பட்ட திரவங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பரவுகிறது.

- இந்த நோய் நுரையீரலில் உள்ள காற்றுப் பைகளை (அல்வியோலி) பாதிக்கும் பாக்டீரியா, வைரஸ்கள் அல்லது பூஞ்சைகளால் ஏற்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Child Survival" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★